வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-4-1995) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8.37 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

111. 1944 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 10-10-1994 ஆம் நாளிட்ட 227 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

112. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 28-12-1992 ஆம் நாளிட்ட 295 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

113. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று

செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-6-1993 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

114. சென்னை, திருவாளர்கள் வாவின் இந்தியா லிமிடெட் 1-4-1994 முதல் 31-3-1999 வரையிலான ஐந்து ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள்–சமய அறக்கட்டளைகள் துறையின் 8-12-1994 ஆம் நாளிட்ட 388 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

126. மானியக் கோரிக்கை எண்கள் 47 மற்றும் 59 - ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் மீதான மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

127. ஊரக மற்றும் சிறு தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

128. மானியக் கோரிக்கை எண் 47-ன் கீழ் பட்டு வளர்ச்சித்துறை மற்றும் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

129. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

130. மானியக் கோரிக்கை எண் 24 - பெருந் தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

131. தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

132. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).

133. மானியக் கோரிக்கை எண் 26 - தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1995-96. (தமிழ், ஆங்கிலம்).